# தமிழீழச் சிறுவர் காப்புச் சட்டம்

இது தமிழீழத்திலுள்ள சிறுவர்களின் உரிமைகளைப் பேணுவதற்கும், பாதுகாப்பதற்கும், மேம்படுத்துவதற்குமாக உருவாக்கப்பட்ட ஒரு சட்ட மாகும்.

இச்சட்டம் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின் ஒப்புதலுடன் தமிழீழச் சட்டவாக்கச்செயலகத்தால் சட்ட மாக்கப்படுகிறது என்பதுடன் இச்சட்டம் தொடர்பில் கூடுதலான ஏற்பாடு களைச் சேர்த்துக் கொள்வதும், திருத்தம் செய்வதும், நீக்கஞ்செய்வதும் சட்டவாக்கச்செயலகத்தால் மட்டுமே மேற்கொள்ளப்படலாம்.

## இயல் - 01
## பொது விளக்கம்

01. இச்சட்டம் ''தமிழீழச் சிறுவர் காப்புச்சட்டம்'' எனவும், 2006 ஆம் ஆண்டின் ...... ஆம் எண் சட்டம் எனவும் சுட்டிக்காட்டப்படலாம் என்பதுடன் இதனகத்துப் பின்னர் இச்சட்டம் எனவும் எடுத்துக்காட்டப்படலாம். *''சட்டத்தின் பெயரும் சுருக் கப் பெயரும்''*

02. இச்சட்டம் 2006 ஆம் ஆண்டின் ...... ஆம் மாதம் ..... ஆம் நாளில் இருந்து நடைமுறைக்கு வருகிறது. *''நடைமுறைக்கு வரும் நாள்''*

03. ''சிறுவர்'' எனப்படுபவர் பதினெட்டு (18) அகவையும் அதற்கு உட்பட்ட அகவையையுடைய ஒவ்வொரு வரையும் குறித்து நிற்கும். *''சிறுவர்''*

04. ''சிறுவர் உரிமைகள்'' என்பது உயிர் வாழவும், பெயரைப் பெறவும், பெற்றோருடன் தொடர்பு வைத்தி ருக்கவும், தன் சொந்த நாட்டில் நுழையவும், கருத்தை வெளிப்படுத்தவும், தகவல்களைப் பெறவும், பரிமாற வும், சிந்திக்கவும், மத வழிபாட்டைப் பேணவும், மற்ற வர்களைச் சந்திக்கவும், சங்கங்களை அமைக்கவும், கூடவும், அந்தரங்கங்களைப் பேணவும், ஓய்வு, பொழு துபோக்கு, விளையாட, கலாசார நடவடிக்கைகளில் *''சிறுவர் உரிமைகள்''*

ஈடுபட, கல்வி கற்க, பாலியல் ரீதியான சுரண்டல்களிலி ருந்து பாதுகாப்பைப் பெற்றுக்கொள்ளவும் சமூக நடவ டிக்கைகளில் பங்குகொள்ளும் உரிமைகளை உள்ள டக்கி நிற்கும்.

05. ''சமூக நடவடிக்கைகளில் பங்குகொள்ளுதல்'' என்பது சுயமாகச் சிந்தித்தல் தம் கருத்துக்களை வலு வாக வெளிப்படுத்தித் தம் அக்கறைக்குரிய விடயங்க ளில் பெரியவர்களையும் ஈடுபடச் செய்தல் ஏனைய மக்களுடன் ஆக்கபூர்வமான முறையில் கூறப்பழகுதல், தம்வாழ்வு, தம் சமூகத்திலும், சமுதாயத்திலும் உள்ள மக்களின் வாழ்வு ஆகியன தொடர்பான தீர்மானங்களில் தீவிர ஈடுபாடு கொள்ளுதல். சிறுவர்களின் தீவிர ஈடுபாடு கொள்ளுதல் போன்றவையே ஆகும். *''சமூக நடவ டிக்கைகளில் பங்கு கொள் ளல்''*

06. ''பாதுகாவலர்'' எனப்படுபவர் இயற்கையாகப் பெற் றோரைச் சுட்டி நிற்கும். ஆனால் பெற்றோரால் கைவிடப் பட்ட பின்னரோ இறப்பின் பின்னரோ சித்த சுவாதீனமற்ற நிலையில் இருந்தாலோ சிறுவரின் நலன் கருதி வழங்கு ரிமை பெற்ற பாதுகாவலராக நியமனம் பெறுபவரையும் சுட்டிநிற்கும். ஆனால் அதி உச்ச பாதுகாவலராகும் உரிமை நீதிமன் றுக்கே உண்டு. *''பாதுகாவலர்''*

07. தம் குடும்பத்தவர்களுடன் வாழ முடியாத சிறுவர்க ளுக்கு விசேட பாதுகாப்பு அவசியமானது. எனவே சிறுவ ரின் பண்பாட்டுப் பின்னணிக்கு உகந்த மாற்றுக் குடும்பப் பேணுகையை ஏற்பாடு செய்தல் அல்லது சிறவர்களுக் கான பேணுகை நிலையங்களில் தங்க வைத்தலுக்கான ஒழுங்கை நீதிமன்றமே மேற்கொள்ளும். *''பாதுகாப்பு''*

08. தமிழீழ விடுதலைப்புலிகளின் தரைப்படை, வான் படை, கடற்படை, காவல்துறை என்பவற்றைச் சுட்டி நிற்கும். *''படை''*

09. ''கருத்துச் சுதந்திரம்'' என்பது பிறரின் உரிமைகளை மீறாத வகையில் தகவல்களைப் பெறவும் மற்றவர்க *''கருத்துச் சுதந்திரம்''*

ளுக்கு அவற்றைப் பரிமாறவும் தன் கருத்துக்களை வெளியிடவும் உள்ள உரிமையே ஆகும்.

10. "கூடும் சுதந்திரம்" என்பது பிறரின் உரிமைகளை மீறாத வகையில் சிறுவர்கள் மற்றவர்களைச் சந்திக்க, கூட அல்லது சங்கங்களை அமைக்கவும் உள்ள உரிமையாகும். *"கூடும் சுதந்திரம்"*

## இயல் - 02
## கல்வி சார் உரிமைகள்

தமிழீழத்திலுள்ள சிறுவர்கள் கல்வியைக் கற்பதற்கும் அதற்கு வழி செய்யவும் ஆளுமை திறன்கள், உடல் மற்றும் உளவாரியான ஆற்றல்களை மேம்படுத்தவும் இலவச கல்வி கிடைப்பதை உறுதி செய்து ஒழுங்குபடுத்துவதை இவ்வியல் விளக்குகிறது.

11. அனைத்துச் சிறுவர்களும் கல்வி கற்கும் உரிமை உடையவர்களே. எனவே ஆரம்பக் கல்வியைச் சிறுவர்கள் பெற்றுக்கொள்ளவும் இலவசக் கல்வியை வழங்கவும் வேண்டிய ஒழுங்குகளை தமிழீழக் கல்விக்கழகமே மேற்கொள்ளும். *"இலவசக் கல்வி"*

12. உள்ளத்தால் அல்லது உடலால் ஊனமுற்ற சிறுவர்கள் இயன்றளவு சுயமாகவும், சமுதாயத்தில் முழுமையான செயலாக்கமுள்ள வாழ்க்கை வாழவும் அவர்களுக்கான தொழில்சார் கல்வி, பயிற்சி போன்றன கிடைக்கவும் ஒழுங்கு செய்தல் வேண்டும். *"ஊனமுற்ற சிறுவர்களுக்கான கல்வி"*

13. வறுமைக்கோட்டின் கீழ் வாழும் சிறுவர்களுக்கு தேவையேற்படும் போது பள்ளி முதல்வர்களூடாக அல்லது வேறு வழிகளில் உதவி அளிப்பது சிறுவர் நலன் பேணும் நிலையங்களின் முதன்மையான கடமையாகும். *"வறுமைப்பட்ட சிறுவர்களுக்கு கல்விக்கான உதவி"*

14. சிறுவர்களின் கல்வி அறிவிற்கும் உளவலுவுக்கும் உடல்வலுவுக்கும் ஏற்றாற் போன்று ஒவ்வொருவருக்கும் பொருத்தமான கல்விசார், தொழில்சார் நெறிகளுக்கு வழிவகை செய்து மேம்படுத்துதல் வேண்டும்.

*''சிறுவர்களுக் கேற்றவாறு தொழில்சார் நெறிகளுக்கு வழிவகை செய்தல்''*

15. பாடசாலைகளில் மாணவர்களின் வருகையை ஊக் குவிக்கும் விதமாகவும் பாடசாலையை விட்டு விலகிச் செல்லும் மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் விதமாகவும், பாடசாலையில் ஒழுக்காற்று நடவடிக்கை களை மேம்படுத்துவதற்குமான நடவடிக்கை முறைக ளைக் கையாளுதல் வேண்டும்.

*''மாணவர்க ளின் வருகை யைஊக்குவிக் கவும் ஒழுக்கா ற்று நடவடிக் கைகள் மேற் கொள்ளுத லும்''*

16. சிறுவர்கள் கட்டாயமாக ஆரம்பக் கல்வியைக் கற்க ஒழுங்கு செய்வதுடன் பாடசாலை நேரங்களிலும் மேற் கல்வி கற்கும் நேரங்களிலும் வீட்டில் வேலைகள் கொடுப்பதைத் தவிர்த்தல், கல்வி கற்பதற்குப் பொருத் தமான சூழலை ஏற்படுத்துதல், ஊக்குவித்தல், பெற்றோர் தம்மிடையே சண்டையிடுதலைத் தவிர்த்தல் போன்ற செயற்பாடுகளைச் செய்வது பெற்றோரின் கடமையாகும்.

*''சிறுவர்களின் கல்விக்கு பெற்றோரின் கடமை''*

17. எல்லோருக்கும் அவர்களின் ஆற்றலின் அடிப்படையி லும், சுயவிருப்பின் பேரிலும் பொருத்தமான வழிமுறையில் உயர் கல்வி கிடைக்கச் செய்தல் வேண்டும்.

*''சுயவிருப்பில் உயர் கல்வி''*

## இயல் - 03
## பாதுகாப்பு சார் உரிமைகள்

சிறுவர்களை சகல வகையான இம்சைகள், புறக்கணிப்புக்கள், பாலியல் சுரண்டல்கள் போன்றவற்றிலிருந்து பாதுகாக்கும் முகமாக இவ்வியல் உருவாக்கப்படுகிறது.

18. சிறுவர்களைப் பெற்றோர்களோ, பாதுகாவலர்களோ துன்புறுத்த உரிமையற்றவர்கள் அவ்வாறு சிறுவர்கள் துன்புறுத்தப்படின் அச்செயல் குற்றமாகக் கருதப்பட்டு ஒறுப்புக்குள்ளாக்கப்படுவர். *''சிறுவர் துன்புறுத்தல் குற்றமாகும்''*

19. சிறுவர் துன்புறுத்தல் குற்றத்தை இழைக்கும் எவரும் ........... ஆண்டுகளுக்கு மேற்பட்டதும் ......... ஆண்டுகளுக்கு உட்பட்டதுமான இருவகையிலொரு வகைச் சிறையொறுப்பினால் ஒறுக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் குற்றக்காசிறிப்பிற்கும் ஆளாதல் வேண்டும். *''துன்புறுத்தலுக்கான ஒறுப்பு''*

20. (1) எவராவது யாரேனும் சிறுவரை பாலியல் ரீதியான தகாத உபயோகத்திற்கு அல்லது பாலியல் நடவடிக்கையில் அல்லது ஏதாவது ஆபாசமான அல்லது கண்ணியமற்ற வெளிக்காட்டலில் பங்கு பற்றும் நோக்கங்களுக்கு ஏதாவது இடங்களில் வைத்திருக்கம் அல்லது அனுபவிக்கும் எச்செயலும் பாலியல்ச் சுரண்டல் ஆகும். *''சிறுவரின் பாலியல் சுரண்டல்''*

(2) பாலியல் புணர்ச்சி நோக்கங்களுக்காக அல்லது எந்த வடிவத்திலும் பாலியல் தகாத உபயோகத்திற்காக குழந்தையை பயன்படுத்துதலும் பாலியல் சுரண்டலாகும்.

(3) அச்சுப் பிரதிகள் அல்லது வேறு ஊடகங்கள் அல்லது வாய்மொழி ரீதியான விளம்பரப்படுத்தல்கள் மூலமாக அல்லது வேறு அதே போன்ற விதங்கள் மூலமாக பாலியல் புணர்ச்சிக்காக அல்லது எந்தவித பாலியல் தகாத உபயோகத்திற்காகவும் ஒரு சிறுவரின் வாடிக்கையாளராக இருக்க ஒருவரைத் தூண்டினால்,

(4) ஒரு சிறுவர் மீது அவருக்குள்ள செல்வாக்கின் அல்லது அதனூடான உறவுமுறையின் சாதக நிலையைக் கையில் எடுத்து அத்தகைய சிறுவரைப் பாலியல்ப் புணர்ச்சிக்காக அல்லது பாலியல் தகாத உபயோகத்திற்காக பயன்பட உதவினால்,

(5) பாலியல்த் தேவைக்காக சிறுவரை அச்சுறுத்தி னால் அல்லது வன்முறையைப் பயன்படுத்தினால்,

(6) அவர் சிறுவர் பாலியல் சுரண்டல் குற்றத்தை இழைத்தவராகக் கருதப்படுவர்.

21. சிறுவர் பாலியல் சுரண்டல் குற்றத்தை இழைத்த எவருக்கும் 05 ஆண்டுகளுக்கு குறையாததும் 20 ஆண் டுகளுக்கு மேற்படாததுமான காலத்திற்கான இருவகை யிலொரு வகைச் சிறையொறுப்பினால் ஒறுக்கப்படுவது டன் குற்றக் காசிறுப்பிற்கும் ஆளாதல் வேண்டும்.

*''சிறுவர் பாலி யல் சுரண்டலு க்கான ஒறு ப்பு''*

## இயல் -04

## படையில் சேர்த்தல்

22. 16 வயதிற்குட்டபட்ட சிறுவர்களை நேரடியாகவோ மறைமுகமாகவோ படையில் இணைத்துக்கொள்ளுதல் அல்லது போர்நடவடிக்கையில் ஈடுபடுத்துதல் முற்றாக தவிர்க்கப்படுதல் வேண்டும்.

*“படையில் சேர்த்தல் ”*

23. அ. 16 - 17 வயதிற்குட்பட்ட சிறார்களை நேரடியாக போர்நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படுதல் கூடாது.

ஆ. பிரிவு 1ல் சொல்லப்பட்ட விடயம் மீறப்படுகின்ற போது குறித்த நபரின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் தகுந்த ஆவணங்களுடன் ஏற்புடைய மாவட்ட முறைமன்றில் மனு ஒன்றைச் செய்மவதமுனூடாக நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டு வரப்பட முடியும்.

*“16 - 17 வயதிற்கு ட்பட்டோர்''*

24. அ. பிரிவு 23ஆற்கு அமைய மனு கிடைத்ததன் மேல் முறைமன்றானது ஆவணங்களைப் பரீசீலித்து மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க போதிய ஏதுக்கள் இருப்பின் தொடர்புடைய பகுதியினரிடமிருந்து

*“முறைமன்றின் நடவடிக்கை”*

விபரத்தைத் திரட்டி உரிய நபரை மன்றில் முற்படுத்துமாறு பணித்தலும் வேண்டும்.

இ . இத்தகைய விசாரணையானது சுருக்க முறையானதாக அமையலாம். அதனுடன் இச் சட்டத்திற்கு அமைய அவர் படையில் இணைத்துக்கொள்ளப்பட முடியாதவராக எண்பிக்கப்படும் பொழுது நீதிமன்றானது குறித்த நபரை பெற்றோரிடம் அல்லது பாதுகாவலரிடம் ஒப்படைக்கும் கட்டளையைப் பிறப்பித்தல் வேண்டும்.

## இயல் - 05
## சிறுவர்சார் விசாரணை

*"சிறுவர் மீது மேலான அக்கறை செலுத்துதல் "*

25. முறைமன்றுகளானது சிறுவர்கள் மீதுமேலான அக்கறையைச் செலுத்தி இலகுவான நீதிசார் நடவடிக்கைகள் ˙பின்பற்றப்படுவதை உறுதிப்படுத்திக கொள்ளல் வேண்டும்.

*"சிறுவர்களை கூண்டில் ஏற்றலாகாது ,*

26. சிறுவர்கள் தொடர்பான குற்றவியல் குடியியல் பிணக்குகள் முறைமன்றின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதும் அது சார் விசாரணைகளில் அல்லது விளக்கங்களில் தொடர்புடைய சிறுவரை கூண்டில் ஏற்றி விசாரித்தலை தவிர்த்தல் வேண்டும்.

*"பத்திரிகையாளர், பார்வையாளர் தவிர்க்கப்படல் "*

27. (i). சிறுவர்கள் தொடர்பான வழக்கு நடவடிக்கைகள் எவையும் பொதுமக்களால் பார்வையிடப்படுதலோ பத்திரிகையாளர்கள் விபரங்களைத் திரட்டுதலோ பார்வையிடுதலோ முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

(ii). எனினும் அவ்வாறு செய்தல் தொடர்புடைய சிறுவனின் நலனில் நன்மை பயக்கும் என முறைமன்றம் நம்பக்காரணம் இருப்பின் அத்தகைய

நடவடிக்கைக்கு ஒப்புதல் வழங்கலாம்.

விலக்கு:- தொடர்புடைய சிறுவனின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் வழக்கு நடவடிக்கைகளை பார்வையிடுதல் இதனால் தடைசெய்யப்படவில்லை.

28. முறைமன்றின் விசாரணையானது முறையாளரின் தனித்துவமான அறையிலோ, வழக்கில் அக்கறை இல்லாதவர்கள் வெளியகற்றப்பட்ட பின் திறந்த மன்றிலோ நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் முறைமன்றிற்கு சட்டபூர்வமானதாகும்.

*"திறந்தமன்றிலோ நீதியாளரின் தனித்துவமான அறையிலோ விசாரணை நடைபெறல்"*

29. சிறுவர் தொடர்பான பிணக்குகளில் அந்நபருக்கு சட்டஉதவி இல்லாவிட்டால் சட்டவாக்கச்செயலகம் ஊடாக அவருக்கான சட்டவாளர் ஒழுங்கு செய்யப்படல் வேண்டும்.

*"சட்ட உதவி"*

30. (i) இயலுமானவரை சிறுவர்களுக்கு சிறைத்தண்டனை வழங்காது வேறு பொருத்தமான தண்டனை வழங்குவது பற்றி முறைமன்றம் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

(ii) எனினும் சிறைவழங்கப்படவேண்டிய அத்தகைய சூழ்நிலையில் ஏனைய குற்றவாளிகளிலிருந்து வேறுபடுத்தப்பட்ட பகுதியில் அவர்களது எதிர்கால நலன் பேணும் வகையில் சிறை ஒழுங்குபடுத்தப்படல் வேண்டும்.

*"சிறையிலுள்ள சிறுவர்"*

31. முறைமன்றானது நன்நடத்தை அடிப்படையில் குற்றங்களுக்கு மன்னிப்பு அளிப்பதற்கான பரிந்துரைசெய்ய இருக்கின்ற அத்தகைய காலங்களில் சிறுவர் தொடர்பான அத்தகைய வழக்குகளை பரிந்துரைக்கு முதன்மைப்படுத்தலாம்.

*"தண்டனை குறைப்பு பரிந்துரை"*

32. ஏதேனும் வழக்கில் சிறாரால் செலுத்தப்படவேண்டிய குற்றப்பணம் அல்லது இழப்பீட்டுப்பணம் அவரது பெற்றோரால் அல்லது பாதுகாவலரால் செலுத்தப்படுவதை தேவைப்படுத்தும் கட்டளை பிறப்பிக்கப்டுவது முறைமன்றுக்கு சட்டபூர்வமானதாகும்.

*" பெற்றோரால் குற்றப்பணம் இழப்பீடு செலுத்தப்படலாம் "*

33. சிறுவர் தொடர்பான குற்றவழக்கெதுவும் தமிழீழ ஒறுப்புச்சட்டத்தின் பிரிவு 57,58 ற்கு அமைய குற்றவழக்காக தொடுக்கப்படுதல் ஆகாது.

*"குற்றமாகாச் செயல் "*

34. 18 அகவைகுட்பட்ட நபரிற்கு சாவொறுப்போ, ஆயுள் சிறைஒறுப்போ வழங்குதல் ஆகாது.

*" 18 அகவைக்குட்பட்ட நபரின் ஒறுப்புத் தொடர்பானது "*

## இயல் - 06
## சிறுவர்களை வேலைக்கு அமர்த்தல்

35. (அ) 18 அகவைக்கு கீழ்ப்பட்டோரை வேலைக்கு ஈடுபடுத்தல் இச்சட்டமூலம் தடைசெய்யப்படுகின்றது. புறநடை - 16 வயதிற்கு மேற்பட்ட 18 வயதிற்கு கீழ்பட்டோர் கல்விக்காகவோ அல்லது அடிப்படை தேவைகள் பூர்த்தி செய்யும் நோக்கத்துக்காக பகுதி நேர வேலையில் ஈடுபடுத்தப்படுவது பிழையானதாகாது

*"சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல் தொடர்பானது "*

36. சிறுவர்களை தொழில் நிறுவனம் ஒன்றிலோ வீடுகளிலோ வேலைக்கு அமர்த்தப்பட்டிருப்பின் அதனை அருகிலுள்ள அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலருக்கு அல்லது காவல் பணிமனைக்கு எவரேனும் நபர் தகவல் வழங்கலாம்.

*"சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்பட் டிருப்பின் அதனை வெளிப்படு த்துதல் "*

37. அ. பெற்றோரின் அனுமதியின்றி சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல் ஒறுக்கப்படத்தக்கதோர் குற்றமாகும்.

*“சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுதல் குற்றமாகும்”*

ஆ. பெற்றோர் தமது பிள்ளைகளை வேலைக்கு அனுப்புதல் ஒறுக்கப்படத்தக்கதோர் குற்றமாகும்.

38. (அ) 37 அ இல் கூறப்பட்ட குற்றம் புரிந்தவர் எவரும் 02 வருடம் வரை நீடிக்கக்கூடிய எளியசிறையினாலோ குற்றக் காசிறுப்பினாலோ இவை இரண்டினாலுமோ ஒறுக்கப்படுதல் வேண்டும் என்பதோடு பிள்ளைக்கு தகுந்த இழப்பீடும் வழங்கப்படுதல் வேண்டும்.

*“சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுதலுக்கான ஒறுப்பு ”*

(ஆ) 37 ஆ இல் கூறப்பட்ட குற்றம் புரிந்தவர் எவரும் 03 ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய சிறையினாலோ குற்றக் காசிறுப்பினாலோ இவை இரண்டினாலுமோ ஒறுக்கப்படுதல் வேண்டும் என்பதோடு பாதிக்கப்பட்ட பிள்ளையின் பெயரில் இழப்பீட்டு தொகையினை ஈடுவதற்கும் மன்று பொருத்தம் என்று கருதின் பிள்ளையினை பராமரிப்பு இல்லம் ஒன்றில் விடுவதற்கும் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

## இயல் -07

## பொதுவானவை

39. பிள்ளை ஒன்று பிறப்பதற்கு முன் அப்பிள்ளைக்கு பாதுகாப்பிளன்மையாக இருந்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலர் மன்றின் ஒப்புதலுடன் அப்பிள்ளைக்கு பொருத்தமான பாதுகாப்பை ஏற்படுத்தல் வேண்டும்.

*‘‘பிறப்பதற்கு முன்னரான பாதுகாப்பு ”*